N

# திருப்புதல் தேர்வு, ஏப்ரல்- 2021
## பனிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 90

I. பலவுள் தெரிக. (அனைத்திற்கும் விடையளி) 14×1=14

1) சாகித்ய அகாதெமி விருது பெற்ற சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நூல்
அ) ஒளிப்பறவை ஆ) சூரிய நிழல் இ) சர்ப்பயாகம் ஈ) ஒரு கிராமத்து நதி

2) ஆராய்ந்து சொல்கிறவர்
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

3) குடும்ப என்ற சொல் முதலில் பயின்று வரும் நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) திருக்குறள் ஈ) பரிபாடல்

4) தமிழில் திணைப் பாகுபாடு ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

5) "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்" இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

6) "யானை புக்க புலம் போல" - இவ்வுமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும் பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
இ) தனக்குப் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

7) வையகமும் வானகமும். ஆற்றலரிது - எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி

8) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்க
அ) வசம்பு ஆ) மணத்தக்காளி இலைச்சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

9) சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

10) 'தலைக்குளம்' என்ற சிறுகதையின் ஆசிரியர்
அ) பூமணி ஆ) தோப்பில் முகமது மீரான் இ) சாந்தாதத் ஈ) உத்தம சோழன்

11) 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதி இ) இளங்கோவடிகள் ஈ) சீத்தலைச்சாத்தனார்

12) 'Debit Card' என்பதன் தமிழ்ச்சொல்
அ) கடன் அட்டை ஆ) பற்று அட்டை இ) சந்தாதாரர் அட்டை ஈ) பயனாளர் அட்டை

13) 'வளர்தலம்' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத் தொகை ஈ) உரிச்சொல் தொடர்

14) இயற்சீர் வெண்டளை என்பது
அ) மாமுன் நிரை ஆ) காய்முன் நேர் இ) மாமுன் நேர் ஈ) விளம் முன் நிரை

II. அ.. குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3×2=6

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16) நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
17) சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் நான்கினைக் கூறுக.
18) அறிவுடைவேந்தனின் நெறிகுறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

ஆ. குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2×2=4

19) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.
20) அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
21) பருவத்தே பயிர் செய் - நேரமேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (மொழிப்பயிற்சி, இலக்கணப் பயிற்சி) 7×2=14**

22) ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக. அ) அறிந்து ஆ) பேசுவார்

23) ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) அருங்கானம் ஆ) முன்னுடை

24) பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக. அ) Lobby ஆ) Passport

25) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க:- கோவில்

26) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வயுறு நெறையும்

27) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. ஊண் - ஊன்

28) மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:- ஆற அமர

29) தமிழாக்கம் தருக. The. pen is mightier than the sword.

30) கீழ்க்காணும் தொடரில் உள்ள பிழையை நீக்குக
சென்னைக்கு அருகாமையில் இருப்பது மதுரை அல்ல.

**IV. அ. சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2×4=8**

31) 'வருபவர் எவராயினும் நன்றி செலுத்து'- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டும் என்கிறார்?

33) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றுள் நான்கினை எழுதுக.

**ஆ. சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2×4=8**

34) சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

35) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிபடுத்துவீர்?

36) வேளாண் மேலாண்மை குறித்து நீவீர் புரிந்துரைப்பனவற்றை எழுதுக.

**V. நெடுவினா (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி) 1×6=6**

37) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் வழி நிறுவுக.

38) எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை கிறித்துவக் கம்பரே என்பதை நும் பாடல் வழி விளக்குக.

**VI. நெடுவினா (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி) 1×6=6**

39) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது எவ்வாறு? விளக்குக.

40) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

**VII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி. 3×4=12**

41) பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து பொருத்தமான நான்கு நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்
- பாரதியார்

42) பொருள் வேற்றுமை அணியை விளக்குக. (அல்லது) உவமை அணியை விளக்குக.

43) வெண்பாவிற்கான பொது இலக்கணம் யாது?

44) தென்றல் (அல்லது) நிலா என்னும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6**

45) 'குழல்வழி நின்றது யாழே' எனத் தொடங்கும் சிலப்பதிகார பாடலை எழுதுக.

46) 'நோய்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**IX. பின்வரும் துணைப்பாடப்பகுதி வினாவிற்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 1×6=6**

47) கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன. இது குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

(அல்லது)

48) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது விளக்குக.

**********

வெ.மணிகண்டன்,M.A.,M.PHIL.,B.Ed.,
முதுகலைத் தமிழாசிரியர்
9677558960

Scanned with CamScanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com